**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**C. C. No.124/2019**

| | | |
|---|---|---|
| L.W.1 P.W.: 1 | | |
| D.W. : | | |
| Name : | **சித்ரா** | Caste : |
| Father's Name : | க/பெ.செல்வராஜ் | Calling : |
| Village: | | Religion : |
| Taluk : | | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.10.2021.

**முதல் விசாரணை:**

நான் தென்னம்புலத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். 1-வது எதிரி செல்வராஜ் எனது கணவர். மற்ற எதிரிகள் எனது கணவருக்கு 2-வது திருமணம் நடத்தி வைத்தவர்கள். சுமார் 28 வருடங்களுக்கு முன்பு எனக்கும் எனது கணவருக்கும் தேத்தாக்குடி எனது தந்தையார் வீட்டில் பெரியோர்களின் நிச்சயித்தபடி திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பிறகு கணவன் மனைவியாக குடும்பம் நடத்தினோம். எனக்கு 3 மகள்கள் உள்ளனர். எனது மூத்த மகள் சத்தியாவை திருமணம் செய்து கொடுத்துவிட்டோம்.எனது 2-வது மகள் கல்லூரி முடித்துவிட்டார். 3-வது மகள் கல்லூரியில் சேர்க்கவேண்டும். எதிரி சாந்தியுடன் பழக்கமாக இருந்தார். நான் அதுபோல் பழக்கம் வைத்துக்கொள்ள வேண்டாம் என்று சொன்னேன். அதற்கு எனது கணவர் சாந்தியை திருமணம் செய்துகொள்வேன் என்று சொன்னார். அதன்பிறகு சாந்தியிடம் எனது குடும்ப நிலவரத்தை சொல்லி திருமணம் செய்யக்கூடாது என்று சொன்னேன். அதற்கு சாந்தி நாங்கள் திருமணம் செய்துகொள்வோம் என்று சொன்னார். எனது மருமகன் அசோகன் அவரது நண்பர் இளையராஜா மூலமாக எனது கணவர் சாந்தியை மறைஞாயநல்லூர் முத்துமாரியம்மன் கோவிலில் வைத்து திருமணம் செய்யபோவதாக தகவல் கிடைத்து என்னிடம் சொன்னார். 11.02.2019ஆம் தேதி காலை சுமார் 10-1/2 மணியிருக்கும். நானும் எனது மருமகன் மற்றும் மகள்கள் மற்றும் உறவினர்களுடன் மறைஞாயநல்லூர் முத்துமாரியம்மன் கோவிலுக்கு போனோம். அப்போது எனது கணவர் மாலையும் கழுத்துமாக சாந்தியின் கழுத்தில் தாலி கட்டிவிட்டார். எங்களை பார்த்ததும்

சாந்தியை அழைத்து கொண்டு சிகப்பு நிற வண்டியில் டி.என். 51 ஜே 5396 என்ற காரில் சாந்தியுடன் ஏறி சென்றுவிட்டார். அந்த காரை சுப்பிரமணியன் என்பவர் ஓட்டினார். அவர் ஏற்பாட்டில்தான் எனது கணவருக்கு திருமணம் நடந்ததாக தெரிந்துகொண்டேன். வேலுச்சாமி மனைவி மோகனா, வாசுதேவன் மனைவி அமுதா, ஆசைத்தம்பியின் மனைவி சக்திபிரியா, சுப்பிரமணியன் ஆகியோர் திருமணத்தை நடத்தி வைத்தார்கள். நான் உயிரோடு இருக்கும்போது எனது கணவர் 2-வதாக சாந்தியை திருமணம் செய்துகொண்டார். இதுசம்பந்தமாக வேதாரண்யம் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அது அ.த.சா.ஆ.1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

மனுவின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.